சுருக்கம்

தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கான குடும்ப ஓய்வூதிய திட்டம் – மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.1500/–லிருந்து ரூ.2000/– ஆகவும் ரூ.500/– பெற்று வருபவர்களுக்கும் ரூ.2,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

**செய்தி மற்றும் சுற்றுலா (நிர்வாகம்–4)த் துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.239** **நாள்.4.10.2006**

பார்வை:-

1) அரசு ஆணை (நிலை) எண்.202, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.14.9.1998
2) அரசு ஆணை (நிலை) எண்.11, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.21.1.2002

---

<u>ஆணை</u>:

தமிழ்நாட்டில் நலிவுற்ற நிலையிலுள்ள ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்களின் குடும்ப நலன் கருதி, அரசு உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவரது துணைவியார் உயிரோடிருந்து அரசு ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்தால் அவரது கணவர் பெற்று வந்த மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூபாய் 1,000/–லிருந்து 50 சதவீதமான, அதாவது ரூபாய் 500/– மட்டும் அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியமாக வழங்க பார்வைகளில் படிக்கப்பட்ட ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. பார்வை 2–ல் கண்டுள்ளபடி பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.500/– லிருந்து ரூபாய் 1500/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. இவ்வாணையில் 4.9.2001க்கு பிறகு இயற்கை எய்திய பத்திரிகையாளரின் துணைவியாருக்கு மட்டும் குடும்ப ஓய்வூதியமாக ரூ.1,500/– வீதம் வழங்கப்படும். ஏற்கனவே குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இந்த உயர்வு பொருந்தாது. அவர்களுக்கு தற்போதைய நிலையே (அதாவது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500/– வீதம்) தொடரும் எனவும் ஆணையிடப்பட்டது.

3. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் 2006–2007 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டதற்கிணங்க, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 1,500/–லிருந்து ரூபாய் 2,000/– ஆகவும் இதை சீராக்கும் பொருட்டு, ஏற்கனவே ரூபாய் 500/– குடும்ப ஓய்வூதியமாக பெறுபவர்களுக்கும் ரூபாய் 2,000/–மாகவும் 1.9.2006 முதல் உயர்த்தி வழங்க ஆணையிடப்படுகிறது. இந்த உயர்வு ஏற்கனவே பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் 1,500/– பெறுபவர்களுக்கும், ரூபாய் 500/– பெறுபவர்களுக்கும் பொருந்துமென ஆணையிடப்படுகிறது.

4. இச்செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும். "2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – 1 திட்டத்தில் சேராதது – AM தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பத்திரிகையாளர்களுக்கு குடும்ப ஓய்வூதியங்கள் – 27 ஓய்வூதியங்கள் – 06 குடும்ப ஓய்வூதியம் (த.தொ.கு.2235 60 102 AM 2769)

...2

5.கூடுதல் செலவினத்திற்கான நிதி ஒதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான கூடுதல் நிதி ஒதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் சேர்ப்பதற்கு ஏதுவாக உரிய வரவு செலவு திட்ட கருத்துக்களை நிதி (செய்தி மற்றும் சுற்றுலா) துறைக்கு உரிய தருணத்தில் அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இச்செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் செய்யப்படுவதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.361/SS/06 செய்தி மற்றும் சுற்றுலா நாள்.28.9.2006–ன்படி ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கல் பேரேட்டு எண்.645.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர் (கணக்குகள் (ம) பணிவரவு) சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/9
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை–6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/35/6.
நகல்:
நிதி (செய்தி மற்றும் சுற்றுலா)த் துறை.
நிதி (வரவு செலவு பொ–11)த்துறை.
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு–செலவு)த்துறை.
செய்தி–ஒலிபரப்பு அமைச்சகம், புதுதில்லி.
அனைத்துத் துறை செயலாளர்கள்.
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை–2
தலைவர், சென்னை பத்திரிகையாளர்கள் சங்கம், சென்னை
தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம், சென்னை.
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு–செலவு) (கணக்குகள்)த் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒம்/..
பிரிவு அலுவலர்.